தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 036/ந/2022
நாள். 10.05.2022

திரு. நா. ஜெகநாதன்,
தேனி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
தேனி அல்லிநகரம் நகராட்சி,
தேனி மாவட்டம். – எதிர்மனுதாரர்

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர், நகராட்சி காலனி, கதவு எண்.53/6, 13வது வார்டு என்கிற முகவரியில் வசிக்கும் திரு. நா. ஜெகநாதன் என்பவரின் 28.03.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.04.2022 அன்று பெறப்பட்டு 036/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரின் மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொண்டு, அதன் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர், நகராட்சி காலனி, கதவு எண்.53/6, 13வது வார்டு என்கிற முகவரியில் வசிக்கும் திரு. நா. ஜெகநாதன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 28.03.2022 நாளிட்ட தனது மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“திரு.B.நவநீதகிருஷ்ணன் என்பவர் அவருக்கு சொந்தமான இடமான அல்லிநகரம் கிராம சர்வே எண்.338/1C–ல் தேனி அல்லிநகரம் நகராட்சி அலுவலகத்தில் கடந்த 12.11.2015–ல் ந.ஊ.ச.1971 பிரிவு 49 மற்றும் த.நா.மா.ந.சட்டம் 1920 பிரிவு 200, 201ன்படி க.வி.எண்.114/2015/எப் 1 மற்றும் க.அ.எண்.76/2015/எப் 1 என்ற எண்ணில் உரக் குடோனுக்காக கட்டிட அனுமதி வாங்கிவிட்டு அக்கட்டிடத்தில் சட்டத்திற்கு புறம்பாகவும் திட்ட அனுமதிக்கு மாறாக ரம்யாஷ் ஹோட்டல் என்ற பெயரில் ஹோட்டல் மற்றும் தங்கும் விடுதியும் நடத்தி வருகிறார் என்று சம்பந்தப்பட்ட தேனி அல்லிநகரம் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு 18.02.2021 ஆம் தேதியில் மேற்கண்ட விவரப்படி பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பி வைத்துள்ளேன். இது நாள் வரையிலும் அக்கடிதத்திற்கு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் சட்ட விரோத செயலில் ஈடுபடும் நபருக்கு துணைபோகும் விதமாக தேனி அல்லிநகரம் நகராட்சி ஆணையாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் துணை போகிறார்கள் ஆகவே மாண்புமிகு நீதி அரசர் அவர்கள்

மேற்படி நபர்கள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்க பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 07.04.2022 நாளிட்ட கடிதம் மூலம் தேனிஅல்லிநகரம் நகராட்சி ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது.

(3) மேலும் மனுதாரரும் மற்றும் தேனி அல்லிநகரம் நகராட்சி ஆணையரும் 18.04.2022 அன்றைய விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.04.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. நா. ஜெகநாதன், 18.04.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வரும் தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"தேனி மாவட்டம் அல்லிநகரம் நகராட்சியில் கிராம சர்வே எண் 338/IC– வார்டு –E பிளாக் 18 T.S.No. 21/141 B–ல் திரு. பி. நவநீதகிருஷ்ணன் என்பவர் உர குடோனுக்காக கட்டிட அனுமதி பெற்றுவிட்டு, அவ்விடத்தில் சட்டத்திற்கு புறம்பாகவும், திட்ட அனுமதிக்கு மாறாகவும் ' ரம்யாஷ் ஓட்டல் ' என்கின்ற பெயரில் ஓட்டல் மற்றும் தங்கும் விடுதி நடத்தி வருகிறார். இது குறித்த புகார் மனுக்கள் அல்லிநகரம் நகராட்சிக்கு அனுப்பப்பட்டும், அதன் மீது நகராட்சியால் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, அனுமதிக்கு மாறாக ஓட்டல் மற்றும் தங்கும் விடுதியாக செயல்படும் மேற்கண்ட கட்டடத்தின் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும், மேற்கண்ட நபருக்கு துணையாக இருந்த சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான தேனி அல்லிநகரம் நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு அலுவலர் திரு.ஆர்.திருமுருகன் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் திரு.ம.தங்கராஜ் ஆகியோர் 18.04.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:–

"வீரமுத்துகுமார் ஆகிய நான் கடந்த மூன்று மாதங்களாக தேனி – அல்லிநகரம் நகராட்சி ஆணையாளராக பணியாற்றி வருகிறேன். மனுதாரரின் புகார் மனுவில் கண்டுள்ள அரண்மனைப்புதூர் சாலையில் ச.எண் 338/IC–ல் அமைந்துள்ள இடத்திற்கு உரக் குடோன் அமைப்பதற்காக திரு. நவநீதகிருஷ்ணன் என்பவருக்கு நகராட்சியால் கட்டட அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் மேற்கண்ட இடத்தில் உரக் குடோனுக்கு பதிலாக அங்கு ஓட்டல் ரம்யாஸ் என்கின்ற பெயரில் ஓட்டல் மற்றும் தங்கும் விடுதி, நடத்தப்பட்டு வந்ததைத் தொடர்ந்து மேற்கண்ட கட்டடத்தின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு கட்டட உரிமையாளரின் மேல்முறையீட்டு மனுநாள் 1.6.2017– ஐ பரிசீலித்து, மேற்கண்ட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டடத்திற்கு நகர் ஊரமைப்பு துறையிடம் உரிய அனுமதி பெறுமாறு அறிவுறுத்தி நகராட்சியின் மூலம் 23.6.2017 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டது. மேலும் மேற்கண்ட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டடத்திற்கு, தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920–ன் படி 20.1.2022 அன்றும், மற்றொரு நோட்டீஸ் 8.3.2022 அன்றும், மேலும் அன்றைய தினமே Lock and Seal Notice-ம் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 5.4.2022 அன்று தேனி மாவட்ட சார்பு நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு தாக்கல் (Charge Sheet filed) செய்யப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் அல்லிநகரம் நகராட்சி ஆணையரின் 12.4.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையே எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்'' என்று தெரிவித்துள்ளனர்.

(6) தேனி அல்லிநகரம் நகராட்சி ஆணையர் தனது 12.04.2022 கடிதத்தில் கீழ்காணும் விபரங்களை சமர்ப்பித்துள்ளார்:–

"தேனி அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட அரண்மனைப்புதூர் சாலையில் ச.எண்.338/1C–ல் காலியிடத்தில், இடத்தின் உரிமையாளர் திரு.B.நவநீதகிருஷ்ணன் என்பவர் கட்டிட அனுமதி வேண்டி 19.01.2015–ம் நாளன்று விண்ணப்பம் செய்ததினை பரிசீலினை செய்து தேனி அல்லிநகரம் நகராட்சியின் மூலம் க.அ.எண்.76/2015/எப்1 நாள்.11.11.2015–ன்படி தரைதளம் 1400 சதுரடி, முதல்தளம் 590 சதுரடி ஆக மொத்தம் 1990 சதுரடி பரப்பளவிற்கு உரக்குடோனுக்கு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து மேற்படி கட்டுமானப்பணிகள் நடைபெறுவதினை பார்வையிட்டதில் மேற்படி, கட்டிடம் கூடுதலாகவும் மாறுதலாகவும் கட்டப்பட்டு வருவதினை கண்டறிந்து தேனி அல்லிநகரம் நகராட்சியின் மூலம் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 205 (1) (2) ன்படி அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டது தொடர்ந்து மேற்படி கட்டிடத்திற்கு வரிவிதிப்பு எண்.125/032/0493 முதல் 0496–ன்படி ரூ.35,408 x 4= ரூ.1,41,632/– வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நபர் 17.04.2017ல் திருத்திய வரைபடம் தயாரித்து நகராட்சியில் சமர்ப்பித்துள்ளதினை பரிசீலிக்கப்பட்டத்தின்படி 27.04.2017–ம் தேதிய கடிதத்தில் கட்டிட அனுமதி மறுப்பாணை உத்தரவு வழங்கப்பட்டது.

மேலும் மேற்படி நபர் கூடுதலாகவும் மாறுதலாகவும் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு அனுமதி வேண்டி வரைபடம் தயாரித்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மதுரை அவர்களுக்கு ஆணையாளர் மூலமாக 01.06.2017ம் நாளன்று மேல்முறையீடு அனுப்பப்பட்டுள்ளது.

அதன்படி மேற்படி துறையின் மூலம் கோப்பினை ஆய்வு செய்ததின்படி மேற்படி உத்தேசம் இணையதள வழியாக சமர்ப்பிக்குமாறு மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்படி நபருக்கு 02.09.2020ம் தேதிய நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சியின் மூலம் 14.09.2020–ம் தேதிய கடிதம் மூலம் இடத்தின் உரிமையாளர் திரு.நவநீதகிருஷ்ணன் என்பவருக்கு மேல்முறையீட்டு மனு செய்வதற்காக அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டதினை தொடர்ந்து மேற்படி நபர் 22.09.2020ம் தேதிய கடிதத்தின் மூலம் கால அவகாசம் கோரப்பட்டதினை தொடர்ந்து மேலும் மேற்படி நபர் கொரானாவால் பாதிக்கப்பட்டதின் காரணமாகவும், மேலும் வயதான நபராக உள்ளதாலும் மேல்நடவடிக்கை எடுப்பதற்காக மேற்படி உத்தேசத்தினை பதிவு பெற்ற பொறியாளர் மூலம் முழுவடிவில் தயாரித்து இணையதள வாயிலாக சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் வேண்டி கடிதம் நகராட்சியில் பெறப்பட்டுள்ளது.

மேலும் சம்பந்தப்பட்ட நபர் கட்டிட அனுமதிக்கு மாறாக கட்டியுள்ள கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920ன்படி 205(1) (2) மற்றும் (3)ன் கீழ் 08.03.2022–ல் நோட்டீஸ் வழங்கப்பட்டு சார்பு நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது மற்றும் நகர் ஊரமைப்பு சட்டம் 1972ன்படி 56, 57ன் கீழ் பூட்டுதல், சீலிடுதல் சம்பந்தமாக அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்படி நபருக்கு தேனி அல்லிநகரம் நகராட்சியின் மூலம் 08.03.2022ல் அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் கட்டிடத்தின் உரிமையாளர் அவர்கள் மேற்படி உத்தேச வரைபடம் 11.04.2022 ல்

இணைய தளம் வழியாக நகர் ஊரமைப்பு துறை மேல்முறையீட்டு குழுவிற்கு மேல்முறையீட்டு மனு செய்யப்பட்டுள்ளதாக 11.04.2022ல் கடிதம் அளித்துள்ளார்.

நகராட்சி அனுமதி அளிக்கப்பட்ட கட்டிட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது '' என்று தெரிவித்துள்ளார்.

(7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், தேனி அல்லிநகரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. அதில் பின்வரும் விவரங்கள் அறியப்படுகின்றன.

மனுதாரரால் தேனி மாவட்டம் அல்லிநகரம் நகராட்சியில் கிராம சர்வே எண். 338/IC, வார்டு–E, பிளாக் 18, T.S.No. 21/141 B–ல் திரு. பி. நவநீதகிருஷ்ணன் என்பவர் உர குடோனுக்காக கட்டிட அனுமதி பெற்றுவிட்டு, அவ்விடத்தில் சட்டத்திற்கு புறம்பாகவும், திட்ட அனுமதிக்கு மாறாகவும் ' ரம்யாஷ் ஓட்டல் ' என்கின்ற பெயரில் ஒட்டல் மற்றும் தங்கும் விடுதி நடத்தி வருகிறார். இது குறித்த புகார் மனுக்கள் அல்லிநகரம் நகராட்சிக்கு அனுப்பப்பட்டும், அதன் மீது நகராட்சியால் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை என புகார் அளிக்கப்பட்டது.

தேனி அல்லிநகரம் நகராட்சி ஆணையாளரால் 2015 ஆம் ஆண்டில் 1990 சதுரடி பரப்பளவில் உரக்குடோன் கட்ட திரு.நவநீதகிருஷ்ணன் என்பவருக்கு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்படி கட்டிட கட்டுமான பணிகள் நடைபெறுவதை ஆய்வு செய்யும்போது, கட்டிடம் கூடுதலாகவும், மாறுதலாகவும் கட்டப்படுவதை கண்டறிந்து தேனி அல்லிநகரம் நகராட்சியால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 205(1) (2)ன்படி அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்பிறகு, எவ்வித தொடர் நடவடிக்கையும், சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் வரிவிதிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

வரிவிதிப்பு செய்யப்பட்ட பிறகே மேற்படி கட்டிடத்திற்கு திரு.நவநீதகிருஷ்ணன் 17.04.2017ல் திருத்திய வரைபடம் தயாரித்து நகராட்சியில் சமர்ப்பித்துள்ளதை பரிசீலிக்கப்பட்டதின்படி 27.04.2017ம் தேதிய கடிதத்தில் கட்டிட அனுமதி மறுப்பாணை உத்தரவு நகராட்சியால் வழங்கப்பட்டுள்ளதையும் அறிய முடிகிறது. நகராட்சி ஆணையரால், கட்டிட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கு, அனுமதி வேண்டி 01.06.2017–ம் நாளன்று வரைபடம் தயாரித்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களுக்கு மேல்முறையீடு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி துறையின் மூலம் கோப்பினை ஆய்வு செய்யும்போது, இணையதளம் வாயிலாக சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. 02.09.2020 நாளிட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு திரு.நவநீதகிருஷ்ணன் அவர்களுக்கு நகராட்சியால் 14.09.2020 நாளிட்ட கடிதம் மூலம் மேல்முறையீடு மனு செய்வதற்காக அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி நபர் 22.09.2020 நாளிட்ட கடிதத்தில் கொரானா பாதிப்பு மற்றும் வயதான நிலை காரணத்தினால் வரைபடத்தினை பதிவு பெற்ற பொறியாளர் மூலம் முழுஅளவில் தயாரித்து இணையதளம் வாயிலாக சமர்ப்பிப்பத்தற்காக காலஅவகாசம் கோரிய கடிதம் நகராட்சியில் பெறப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட கட்டிட பரப்பளவிற்கு மாறாக கட்டிடம் கட்டிய கட்டிட உரிமையாளர் மீது 2022 ஆம் ஆண்டில் முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த புகார் மனுவினை விசாரிக்கும் தருணத்தில் தேனி அல்லிநகரம் நகராட்சி நிர்வாகத்தினர், 2015 ஆம் ஆண்டு முதல் எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்காமல் 2022 ஆம் ஆண்டில்தான் கட்டிட உரிமையாளருக்கு 1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971ன் கீழ் அறிவிப்புகள் அவசர அவசரமாக அனுப்பப்பட்டது தெள்ளத்தெளிவாக ஆவணங்களிலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில் சட்டவிரோதமாக அனுமதிக்கப்பட்ட பரப்பளவிற்கு மாறாக திரு.பி.நவநீதகிருஷ்ணன் என்பவரால் கட்டப்பட்ட கட்டிடத்தின்மீது 2015 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டுகள் வரை எந்தவிதமான சட்டபூர்வமான நடவடிக்கையையும் மேற்கொள்ளாமல் இருந்தது நகராட்சி நிர்வாகத்தின் மெத் தனப் போக்கையே காட்டுவதாக இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. இதனை இம்முறைமன்ற நடுவம் மிக வன்மையாக கண்டிக்கிறது. கட்டிடத்தை உரிய விதிகளின்படி உரிய காலத்திற்குள் Lock and seal மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் போன்ற எந்தவித சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளாத சம்பந்தப்பட்ட கள அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு மே திங்கள் 10–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. நா. ஜெகநாதன், மாநில துணை செயலாளர்,
இந்திய குடியரசு தொழிலாளர் தொழிற்சங்கம்,
13வது வார்டு, கதவு எண்.53/6, நகராட்சி காலனி,
போடிநாயக்கனூர், தேனி மாவட்டம் 625 513.

2) ஆணையாளர், தேனி அல்லிநகரம் நகராட்சி. தேனி 625 531.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.